# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

நகராட்சி அலுவலகம், தனி அலுவலர் (ம) ஆணையர்,
திருவேற்காடு திருவேற்காடு நகராட்சி.
நாள்: 30.09.2019

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.857 நாள்.30.09.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–_** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.858 நாள்.30.09.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.859 நாள்.30.09.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண். 4**

திருவேற்காடு நகராட்சி 28.50 சதுர கி.மீ பரப்பளவில் 18 வார்டுகளை உள்ளடக்கியுள்ள தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி பெருநகர சென்னை மாநகராட்சியை ஒட்டியுள்ள புறநகர் பகுதியாக உள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உள்ள மக்கள் தொகை 62289 எனவும், 2017ம் ஆண்டு இந்நகராட்சியின் பரப்புரையாளர்கள் மூலம் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி உள்ள மக்கள் தொகை 89164 ஆகும். இந்நகராட்சி பகுதியில் 22291 குடியிருப்புகளும், 701 வணிக நிறுவனங்களும் உள்ளன. நகராட்சி துப்புரவு பணியாளர்கள் மூலம் வீடுகள் தோறும் தினசரி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என சுமார் 22.29 MT அளவில் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் குப்பைகளில் சுமார் 11.14 MT அளவு மக்கும் குப்பைகளாக பெறப்பட்டு ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 7 பசுமை உரக்குடில்கள் (MCC) மற்றும் 10 Onsite Compost Centre ஆகியவற்றில் கொண்டு செல்லப்பட்டு இயற்கை முறையில் உரமாக்கப்படுகிறது. மக்காத குப்பைகளாக மீதமுள்ள 11.15 MT குப்பையில் விற்பனை செய்ய தகுதியான குப்பைகள் என சுமார் 1.09 MT அளவில் பிரிக்கப்பட்டு அவை உள்ளூர் விற்பனையாளர்களுக்கு நேரடியாக விற்க்கப்பட்டு அதன் மூலம் பெறப்படும் தொகை துப்புரவு பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேலும், சுமார் 2.67 MT அளவில் சேகரமாகும் கல்மணல்

மற்றும் கால்வாய் தூர்வாரும் மண் ஆகியவை நகரில் உள்ள தாழ்வான பகுதிகளில் கொட்டப்பட்டு வருகிறது மற்றும் 7 MT அளவில் சேகரமாகும் மறுசுழற்சி செய்யத்தக்க மக்காத குப்பைகள் அரியலூரில் உள்ள அல்டரா டெக் சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் செங்குன்றம் பகுதியில் உள்ள நிகிலேஷ் வேஸ்ட் மார்ட் நிறுவனங்களுக்கு எரிபொருளாக பயன்படுத்திக் கொள்ள நகராட்சி செலவில் அனுப்பி வைக்கப்படுவதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. இந்நிலையில் அவ்வாறு அனுப்பப்படும் மக்காத குப்பைகள் அதிக அளவில் உள்ளதை தொடர்ந்து, மேற்படி நிறுவனங்கள் அவ்வப்போது ஏற்க மறுப்பதால் இந்நகராட்சிக்கு சொந்தமான கோலடி பகுதியில் சேகரம் செய்யப்படுகிறது. கோலடி பகுதியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், சேகரிக்கப்படும் மக்காத குப்பைகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, தினசரி இந்நகராட்சி பகுதிகளில் சேகரம் செய்யப்படும் மறுசுழற்சி செய்யத்தக்க மக்காத குப்பைகளை, இயற்கைக்கு கேடு விளைவிக்காத வகையிலும், நீர் மற்றும் காற்று மாசு ஏற்படாத வகையில் நவீன வகையில் எரித்து, கட்டுமான பொருளாக பயன்படுத்த தேவையான 10 MT அளவிளான Scientific Incinerator–ஐ கோலடி பகுதியில் உள்ள நவீன எரிவாயு தகன மைய வளாகத்தில் நிறுவிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்படி 10 MT Capacity Scientific Incinerator–நிறுவும் பணியினை திடக்கழிவு மேலாண்மையில் அனுபவம் உள்ள நிறுவனங்கள் மூலம் பொது – தனியார் கூட்டு (Public Private Partnership Mode) வகையில் Request for Proposal (RFP) முறையில் நிறுவி 10 வருட காலத்திற்கு நகராட்சி செலவில் மறு சுழற்சி செய்யதக்க மக்காத குப்பைகளை கட்டுமான பொருளாக மாற்றிட அதற்கான செலவினத்தினை மேற்படி நிறுவனங்களுக்கு வழங்கிடவும் கருத்துருவில் தயாரிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி ஒப்பந்த காலத்திற்கு பின்னர் Incinerator கட்டமைப்புகளுடன் நகராட்சிக்கு திரும்ப ஒப்படைக்கும் வகையில் திட்டத்தினை செயல்படுத்திட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஈ) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியினை பெற்று இத்திட்டத்தினை செயல்படுத்திடவும், தயாரிக்கப்பட்டுள்ள கருத்துருவிற்கு அனுப்பி வைத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.4853/2019இ1)

**நகர்மன்ற தீர்மான எண்.860** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.5</u>

இந்நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டடத்திற்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதால் தற்காலிகமாக திருவேற்காடு ஐயப்ப மடம் சாலையில் உள்ள ஐயப்ப சுவாமிகள் அறக்கட்டளைக்கு சொந்தமான 4900 சதுர அடி பரப்பில் உள்ள கட்டடத்தில் மாத வாடகை ரூ.60,000/–க்கு வாடகை அடிப்படையில் 01.11.2018 முதல் 31.10.2019 வரையிலான ஒருவருட காலத்திற்கு இயங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைகள் ந.க.எண்.31439/2018/ஆர்2, நாள்.15.02.2019–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதியதாக கட்டப்பட்டு வரும் அலுவலக கட்டடத்தில் அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்ப வசதிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கூடுதலாக முதற்தள கட்டுமான பணிகள் மேற்கொள்ள 31.07.2019ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தற்போது வாடகை அடிப்படையில் இயங்கி வரும் கட்டடத்திற்கு அனுமதி காலம் 31.10.2019–வுடன் முடிவடையவுள்ளதாலும், ஏற்கனவே அறக்கட்டளையுடன் மேற்கொண்ட வாடகை ஒப்பந்தத்தில் அடுத்த ஒருவருடத்திற்கு (01.11.2019 முதல் 31.10.2020 வரை) 10 சதவீதம் கூடுதலாக வாடகையினை உயர்த்தி ரூ.66,000/–என வழங்க வேண்டுமென ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, புதிய அலுவலக கட்டடத்தில் கட்டுமான பணிகள் முடிவுற்று அலுவலகத்தினை இடம் மாற்றும் வரை தற்போது இயங்கி வரும் வாடகை கட்டடத்தில் உயர்த்தப்படவுள்ள மாதந்திர வாடகை கட்டணம் ரூ.66,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மூலம் கருத்துருவிற்கு அனுமதி பெற மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.861** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 6

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் பருவ மழையின் போது வெள்ள பாதிப்பு ஏற்படா வண்ணம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக பொதுநிதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில். |
|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரிரை JCB இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல் மற்றும் தேவையான மணல் மூட்டைகள் தயார் செய்தல். | 8.00 |
| 2. | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற தேவையான நீர் மூழ்கி மின்மோட்டார்கள், வெளியேற்று குழாய்கள், PVC பைப்புகள் மற்றும் கேபிள் சப்ளை செய்தல். | 7.00 |
| 3. | நகராட்சி சொந்தமான மோட்டார்களை பயன்படுத்தி மழைநீர் வெளியேற்ற தேவையான ஆட்களை சப்ளை செய்தல். | 5.00 |
| 4. | நகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் அதிக திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் பொருத்தி மழைநீரினை வெளியேற்றுதல். | 9.50 |

**<u>அலுவலக குறிப்பு :–</u>** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.862** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சியில் 12 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் 49 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் மூலம் திரவ குளோரினேசன் வசதிகள் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது திரவ குளோரினேசன் கையிருப்பு அளவு குறைவாக இருப்பதாலும், எதிர்வரவுள்ள பருவமழை காலத்தில் பொதுமக்களுக்கு சீரான குளோரினேசன் கலந்த குடிநீர் வழங்க தேவைக்கேற்ப திரவ குளோரினேசன் வாங்கிக்கொள்ளவும், அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.863** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

இந்நகராட்சியில் இயங்கி வரும் பொது பிரிவு, கணினி பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவின் கீழ் பயன்படுத்தப்படும் அனைத்து கணினிகள், பிரின்டர்கள், பேட்டரிகள், ஸ்கேனர் போன்றவற்றில் அவ்போது ஏற்படும் பழுதுகளை சீர்செய்திடவும், இவற்றின் பராமரிப்பினை ஒருவருட காலத்திற்கு தனியார் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளவும் அதற்காக பொதுநிதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.864 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகள், தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பருவ மழைக்கு முன்னர் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி இல்லாத கட்டமைப்புகளில் புதியதாக ஏற்படுத்தவும், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்புகளை பராமரிக்க வலியுறுத்தி நகராட்சி மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு முறையே நகராட்சி நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சி உள் மற்றும் வெளிபுற பணியாளர்கள் மூலம் வீடுகள் தோறும் கணக்கெடுப்பு மற்றும் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி வந்து செல்லும் பொது மக்களின் பார்வைக்காக மழைநீர் சேகரிப்பு குறித்த மாதிரியினை தயார் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2,50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.865 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 10

மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் ந.க.எண்.128/செமதொஅ/2019, நாள். .07.2018—ன் கடிதத்தின்படி தினத்தந்தி தினசரி நாளிதழில் தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடவுள்ளதாகவும் அத்தொழில் சிறப்பு மலரில் நகராட்சியின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்து விளம்பரம் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டப்பணிகள் குறித்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு மேற்படி கீழ் குறிப்பிட்டுள்ள பத்திரிகை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி பணியின் அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம். மேலும், மேற்படி செலவினத்திற்கான தொகையினை பொது நிதியின் கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பரம் மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | M/s.The Daily Thanthi, No.86, E.V.K Sampath Road, Chennai- 600007. | தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சி பற்றிய விபரங்கள் குறித்த தொழில் மலர் 2019 வெளியிடுதல். | MDS1920-0104530 09.10.2019 | 35,280/— |
| | | | **மொத்தம்** | **35,280/—** |

**அலுவலக குறிப்பு :—** அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.866 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 11

இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் தினேஷ் நகர், நியூ சென்சூரியன் அவென்யூ, வேலம்மாள் பள்ளி சாலை, வெள்ளாளர் தெரு, வானகரம் பிரதான சாலை, பிர்லா கம்பெனி

சாலை, புளியம்பேடு பாலாஜி நகர், கோ–ஆப்ரேடிவ் நகர் மற்றும் ஒத்தவாடை தெரு ஆகிய பகுதிகளில் ரூ.8,50,000/–மதிப்பீட்டில் ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைக்க இந்நகரமன்ற தீர்மான எண்.670 நாள்.31.01.2019–ன்படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, இப்பணியினை மேற்கொள்ள 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மதிப்பீட்டை விட 0.09% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.கிரண் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகரமன்ற தீர்மான எண்.710 நாள்.28.02.2019–ன்படி ஏற்றுகொள்ளப்பட்டதை தொடர்ந்து, மேற்படி நிறுவனத்தாருக்கு 28.02.2019 அன்று பணி உத்திரவு வழங்கி உத்திரவிடப்பட்டது.

மேற்படி மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள பகுதியில் நில அமைப்பில் புவியியல் வல்லுரை (Geologist) கொண்டு நிலத்தடி நீரினை ஆய்வு செய்த நிலையில் வேலம்மாள் பள்ளி சாலை, கோ–ஆப்ரேடிவ் நகர் மற்றும் ஒத்தவாடை தெரு ஆகிய பகுதிகளில் மட்டும் நிலத்தடி நீர் ஆதாரம் உள்ளது எனவும், தினேஷ் நகர், நியூ சென்சூரியன் அவென்யூ, வெள்ளாளர் தெரு, வானகரம் பிரதான சாலை, பிர்லா கம்பெனி சாலை, புளியம்பேடு பாலாஜி நகர் ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீர் ஆதாரம் இல்லை எனவும் தல ஆய்வின் போது தெரிவிக்கப்பட்டது.

எனவே, நிலத்தடி நீர் ஆதாரம் இல்லாத பகுதிகளில் பணி மேற்கொள்ளாமல் நிலத்தடி நீர் ஆதாரம் உள்ள பகுதிகளில் பணி மேற்கொள்ளவும், வார்டு எண்.18 பெரிய கோலடி பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு நில அமைப்பின் வல்லுனர் மூலம் இப்பகுதியில் நிலத்தடி நீரினை ஆய்வு மேற்கொண்டு அதே மதிப்பீடு தொகையில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறு இடம் மாற்றியமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) நிலத்தடி நீர் ஆதாரம் இல்லாததால் தினேஷ் நகர், நியூ சென்சூரியன் அவென்யூ, வெள்ளாளர் தெரு, வானகரம் பிரதான சாலை, பிர்லா கம்பெனி சாலை, புளியம்பேடு பாலாஜி நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைப்பதை ரத்து செய்யவும், நீர் ஆதாரம் உள்ள பெரிய கோலடி பகுதியில் இதே மதிப்பீட்டில் கூடுதல் செலவினமின்றி இடமாற்றம் செய்து பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.867 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 12</u>

இந்நகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் மின்மோட்டார் பொருத்தி தெரு குழாய்கள் மூலம் நேரிடையாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பருவ மழை காலங்களில் நோய்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு நேரிடையாக விநியோகம் செய்யும் ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேசன் வசதிகளை மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில். |
|---|---|---|
| 1. | ஈஸ்வரன் நகர், திருவேற்காடு மகாலட்சுமி நகர், யாதவாள் தெரு மற்றும் பாரதி நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேஷன் வசதிகள் செய்தல். | 9.50 |
| 2. | வெங்கடேஸ்வரா நகர், கீரின் பார்க், ஸ்ரீதேவி கருமாரியம்மன் நகர் மற்றும் கே.பி.எஸ் நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேஷன் வசதிகள் செய்தல். | 9.50 |
| 3. | சூரிய நாராயணன் நகர், ஆவடி–பூவிருந்தவல்லி பிரதான சாலை, காமாட்சிபுரம் மற்றும் பாலாம்பிகை நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேஷன் வசதிகள் செய்தல். | 9.50 |
| 4. | கிராமணி தெருவில் உள்ள பொது கிணறு, திவ்யா நகர், செல்லியம்மன் நகர் (பிள்ளையார் கோயில் அருகில்) மற்றும் வி.ஜி.எஸ் நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேஷன் வசதிகள் செய்தல். | 9.50 |

| | | |
|---|---|---|
| **5.** | நூம்பல் ராஜீவ் நகர், கவரை தெரு, நூம்பல் மகாலட்சுமி நகர் மற்றும் சொக்கலிங்கம் நகர் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேஷன் வசதிகள் செய்தல். | 9.50 |
| **6.** | நூம்பல் பிரதான சாலை, பெருமாள் கோயில் தெரு, தெருவீதியம்மன் கோயில் தெரு மற்றும் ராஜாஸ் கார்டன் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேஷன் வசதிகள் செய்தல். | 9.50 |
| **7.** | பாலாஜி நகர், மூகாம்பிகை நகர், அசோக் நந்தவனம் மற்றும் அயனம்பாக்கம் வெள்ளாளர் தெரு (ஆச்சி கம்பெனி அருகில்) ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் திரவ குளோரினேஷன் வசதிகள் செய்தல். | 9.50 |

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.868** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட விசாக் அவென்யூ, புளியம்பேடு பாலாஜி நகர், நூம்பல் பெருமாள் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைவாக உள்ளதால் போதிய அளவில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகின்றது. எனவே, பொது மக்களின் அடிப்படை வசதியினை கருத்திற் கொண்டு மேற்கண்ட இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்திட ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.869** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 14

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நூம்பல் சொக்கலிங்கம் நகர் மற்றும் ராஜாஸ் கார்டன் ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைவாக உள்ளதால் போதிய அளவில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகின்றது. எனவே, பொது மக்களின் அடிப்படை வசதியினை கருத்திற் கொண்டு மேற்கண்ட இடங்களில் புதியதாக ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்திட ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

**அ)** அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** மேற்படி பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.870** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 15

1. Resolved that Thiruverkadu Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs.299.86 Lakh (Rupees Two hundred Ninty Nine Lakhs and Eighty Six thousand only) from TUFIDCO for 'Provision of Internal Plumbing for HSC (Minimum 9000 Nos) for making optimum utilization of Water Supply at Thiruverkadu Municipality' under

Revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.

2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Thiruverkadu Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Thiruverkadu Municipality.
3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.
4. Resolved to adhere to time line as envisaged in DPR.
5. Resolved that Thiruverkadu Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Thiruverkadu Municipality's annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.
6. Resolved that Thiruverkadu Municpality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for Water Supply in favour of TUFIDCO till the repayment of Loan.

**அலுவலக குறிப்பு:-**

அ. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ.மேற்கண்டவாறு அனுமதி பெறப்பட்ட வட்டியில்லாக்கடன் தொகை ரூ.299.86 இலட்சம் போக கூடுதல் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.871** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 16</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. அதன்படி பழுதடைந்த கீழ்க்கண்ட சாலைகளை செப்பனிட்டு சீர்செய்யவும் அதற்காக சிப்பங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 1,3,4 &18 | செட்டி தெரு பிரதான சாலை, கருமாரியம்மன் நகர் பிரதான சாலை, கோலடி பிரதான சாலைகளை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல், எட்டீஸ்வரன் கோயில் தெரு மற்றும் யாகவ மங்கள் ராஜ் தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். | 4.121 | 4.10 - 6.00 | 200.00 |
| 2. | II | 3,4,5,15, 16,17& 18 | அம்பாள் நகர் பிரதான சாலை, சூரியநாராயணன் நகர், காவெட்டி பிள்ளையார் கோயில் தெரு, செல்லியம்மன் நகர், ராம் நகர், ட்டி.ட்டி.எஸ் நகர், பெரியகோலடி, விக்னேஷ் நகர், எஸ்(அன்)பி குடியிருப்பு, பாரதியார் 2வது தெரு மற்றும் ஆச்சி தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். | 5.339 | 4.10 - 6.00 | 200.00 |
| 3. | III | 1,3,9,11 &12 | விஜய் நகர் பிரதான சாலை, விஜய் நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது குறுக்கு தெரு, 5வது குறுக்கு தெரு, 7வது குறுக்கு தெரு, பி.கே.எம் சாலை, கலைஞர் கருணாநிதி தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர் | 5.819 | 4.10 - 5.00 | 200.00 |

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | பிரதான சாலை, 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 5வது தெரு, 6வது தெரு, ஜெய் நகர் செல்லம்மாள் தெரு, பாலாஜி நகர் 1வது தெரு, 1வது குறுக்கு தெரு, பாலாஜி நகர் 2வது தெரு, எம்.ஜி.ஆர் நகர் பிரதான சாலை, புறநகர், சண்முகா நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, காமராஜ் தெரு 1வது குறுக்கு தெரு, அம்மன் நகர் பிரதான சாலை, அம்மன் நகர் 1வது தெரு மற்றும் 3வது தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | | | |
| | | | **மொத்தம்** | **15.279** | | **600.00** |

**அலுவலக குறிப்பு :–**

அ) ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிகளை ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2019–20 (Phase-II)–ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரி கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு அனுப்பிடவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.872 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண். 17

சென்னை உயர்நீதிமன்றத்தில் திருவேற்காடு நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள பல்வேறு வழக்குகளுக்கு நகராட்சியின் சார்பாக ஆஜாரகி வழக்கினை ஏற்று நடத்திட Standing Counsel பதவி வகித்துவரும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன்தாஸ் அவர்களுக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வழக்கு கட்டணம் செலுத்திட வேண்டியுள்ளது

| வ.எண் | பெயர் | வழக்கு எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | Malakondaiya | (Writ Appeal) Including Court Fees | 45000 |
| 2 | Obiah | (Writ Appeal) Including Court Fees | 45000 |
| 3 | Vedaele agegar | **21599/2019** | 10000 |
| 4 | P Kubendiran | **18501/2019** | 10000 |
| 5 | Poovai Kanthan & Othars | 15006/2019 | 10000 |
| 6 | R Thiyagurajan | **12199/2019** | 10000 |
| 7 | Sundaramorthy | **32303** to 32308 / 2017 | 8000 |
| 8 | Sarala | 990/2006 | 8000 |
| 9 | G Babu | **27611/2017** | 8000 |
| 10 | Dhanarajan | **5891/2019** | 8000 |
| 11 | V Gopal | 227/2018 | 8000 |
| 12 | S&P Residency | **19205/2017** | 8000 |
| 13 | S Henry Christy Raj | **21509/2016** | 8000 |
| 14 | Banupriya | **28262/2018** | 8000 |
| 15 | R Gopal | **28974/2018** | 8000 |
| 16 | Dhanarajan | **17451/2017** | 8000 |
| 17 | Sri Shanmuga Nagar Welfare Association | **32613/2017** | 8000 |
| 18 | Rajendren | **32406/2018** | 8000 |
| 19 | S V Sriramlu Legal Opinion Fees | | 15000 |
| | | **மொத்தம்** | **241000** |

மேற்படி வழக்குகளுக்கான தொகை ரூ.241000/-யினை வழக்கறிஞருக்கு வழங்கவும், இதற்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.873** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 18**

திருவேற்காடு நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் Swachhata Hi Seva மற்றும் " Plastic Free India " என்ற தலைப்பில் கலை நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு பேனர்கள் , மாணவ மாணவியருக்கான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் புத்தாக்க பயிற்சிகள் நடத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள Swachhratha Hi Seva " Plastic Free India " ஆகிய திட்ட பணிகளின் கீழ் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மற்றும் இதற்கான கலை நிகழ்ச்சிகள், புத்தாக்க பயிற்சிகள், மாணவ மாணவியருக்கான பேரணி மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும் சிறந்த முறையில் பணிபுரிந்திட்ட துப்புரவு பணியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் மகளிர் சுயஉதவி குழுக்கள், பொது நல சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஆகியோருக்கான பாராட்டு விழா பரிசளிப்பு மற்றும் விருந்து உபசரிப்பு ஆகிய பணிகள் ஆணையர் அவர்களின் அறிவுரை படி மேற்கொள்ளவும் இதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது நிதியின் கீழ் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.874** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 19**

திருவேற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வரப்படுகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் தற்போது நகராட்சி பகுதியில் காய்ச்சல் நோய் வேகமாக பரவும் காலநிலை உள்ளதாலும், வாகனம் மூலம் புகை போக்கி இயந்திரம் பொருத்தப்பட்டு நகர் பகுதியில் கொசு ஒழிப்பு புகை மருந்து தெளிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் காய்ச்சல் நோய் பாதித்த குடியிருப்புதாரர்களின் வீட்டிற்குள் சென்று சுற்றுப்புறங்களில் கொசு ஒழிப்பு புகைமருந்து தெளிக்க இயலாததாலும், மேலும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கவும், கட்டுப்படுத்தவும் பெரிய இயந்திரங்கள் பயன்படுத்த இயலாத நிலைஉள்ளதாலும் சிறியவகை புகை போக்கி இயந்திரம் (Mini Fogging Machine) 2 லிட்டர் மற்றும் 5 லிட்டர் கொள்ளளவு கொண்ட 10 எண்ணிக்கை மிஷின்களையும் அதற்கான 500 சிலிண்டர்களையும் கொள்முதல் செய்யவும் இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது நிதியின் கீழ் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.875** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 20**

திருவேற்காடு நகராட்சியின் 18 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுக்களினால் பரவும் இதர நோய்களிலிருந்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வாரந்தோறும் மாவட்ட ஆட்சியரால் நடத்தப்படும் டெங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களின் ஆய்வுக் கூட்டங்களிலும், துணை இயக்குநர், பொதுசுகாதாரம்,

திருவள்ளூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படியும் டெங்கு தடுப்பு முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தற்போது எதிர்வரும் மழைக்காலத்தினால் வரக்கூடிய டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக போதுமான அளவு மருந்துகள் இருப்பில் வைத்துக்கொள்ள வேண்டி, மேற்படி உயர் அலுவலர்களின் அறிவுரையின்படி பைராத்திரம் 200 லிட்டர், டெமிபாஸ் 250 லிட்டர் ஆகியவற்றை TNMSC தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகை ரூ.4.50/– இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் செலவீன தொகை செய்தமைக்கும் மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.876** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 21</u>**

திருவேற்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுகாதார பணிகளை மேற்கொள்ளவதற்கு துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாடப்பொட்கள், போதிய அளவு இருப்பு இல்லாததாலும் எதிர்வரும் வடக்கிழக்கு பருவ மழை தொடங்கியதாலும் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகுகிறது. எனவே பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதியும் மற்றும் மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர் மாவட்டம், இணை இயக்குநர் பொது சுகதாரம் திருவள்ளூர் மாவட்டம், நகராட்சிகள் நிர்வாக ஆணையர் சென்னை, மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரது டெங்கு விழிப்புணர்வு ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள படி நகராட்சியில் தளவாட பொருட்கள் மற்றும் கிருமி நாசினிகள், எந்த நேரத்திலும் தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகராட்சியில் தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததனாலும், மேற்படி தளவாடை பொருட்கள் வாங்கி உபயோகித்திட இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.877** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 22</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேலும் நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம், டெங்கு நோய் ஒழிப்பு விழிப்புணர்வு, பேட்டரியால் இயங்க கூடிய வாகனம் பயன்படுத்தும் அறிமுக விழாவிற்கு Plastic Free Awarness மற்றும் அதிகப்படியான திடக்கழிவு சேகரித்தல் விழிப்புணர்வு பணி மேற்கொள்ளுதல், CRRT பணி புகைப்படங்கள் எடுத்துச் சொச் பாரத் புகைப்படங்கள் போன்ற நிகழ்வுகள் 02.11.2018 முதல் 21.09.2019 வரை ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டன. மேற்படி ணேி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை வழங்கல்படவில்லை. தற்போது திரு.பிரபாகரன் போட்டகிராப்பர் Outdoor Division அவர்களிடமிருந்து பட்டியல் தொகை ரூ.70,260/– வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் செலவீனத் தொகை பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.222/2019/எச்1)**

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.878** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 23</u>**

திருவேற்காடு நகராட்சியில் டெங்கு நோய் ஒழிப்பு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மேலும், மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர் மாவட்டம், மற்றும் இணைக்குநர் பொது சுகாதாரம், திருவள்ளூர் மாவட்டம், அவர்களின் பல்வேறு ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி நகராட்சி பகுதியில் டெங்கு நோய் பராவாமால் இருக்கவும் முதீர்ந்த கொசுகளை அழிக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் தினதோறும் குடியிருப்பு பகுதிகளில் விடுதலின்றி களப்பணி மேற்கொள்ளவும் பணியாளர்களை சப்ளை செய்ய (DBC Workers) ஒப்பந்தபுள்ளி கோரிட தினமலர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கீழ் குறிப்பிட்டுள்ள பத்திரிகை நிறுவனத்திடமிருந்து வரபெற்றுள்ள பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மேற்படி செலவீனத்திற்கான தொகையினை பொது நிதியின் கீழ் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விளம்பர செய்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விளம்பர மேற்கொண்டதற்கான பணி விபரம் | பட்டியல் எண். மற்றும் தேதி | பட்டியல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | Bright Advertising No.13, Moores Road, Moores Garden, Thousand Lights, Chennai – 600006. | டெங்கு நோய் ஒழிப்பு பணியாளர்கள் (DBC Workers) சப்ளை செய்தல் பணி தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்தது. | 7035 04.09.2019 | 24854/– |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.879 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 24</u>**

இந்நகராட்சி சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் டாடா ஏ.சி. வாகனம் பதிவு எண். TN12-J-8957 வாகனத்திற்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் (Insurance) 25.10.2019 உடன் முடிவடைவதால் ஒரு வருட காலத்திற்கு காப்பீடு தொகை 20691.00 The New India Assurance Company Limited நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.880 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 25</u>**

திருவேற்காடு நகராட்சியின் 18 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுக்களினால் பரவும் இதர நோய்களிலிருந்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வாரந்தோறும் மாவட்ட ஆட்சியரால் நடத்தப்படும் டெங்கு தொடர்பான ஆய்வுக் கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மேலும், 27.07.2019 அன்று நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் போதிய அளவு இருப்பு வைத்துக்கொள்ளவும், தொடர்ந்து அனைத்து வார்டுகளில் கொசுபுகை மருந்து அடிக்கப்படவேண்டும்மென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், துணை இயக்குநர், பொதுசுகாதாரம், திருவள்ளூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின்படியும் டெங்கு தடுப்பு முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. தற்போது மேலும், எதிர்வரும் மழைக்காலத்தினால் வரக்கூடிய டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக

போதுமான அளவு மருந்துகள் இருப்பில் வைத்துக்கொள்ள வேண்டி, மேற்படி உயர் அலுவலர்களின் அறிவுரையின்படி பைராத்திரம் 300 லிட்டர் TNMSC தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகை ரூ.4.50/– இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.881** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 26</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறட்சி காலங்களில் பொது மக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக தனியார் டேங்கர் லாரிகளை வாடகை அடிப்படையில் ரூ.10.00 இலட்சம் செலவினத்தில் அரசின் வறட்சி நிவாரண நிதியினை எதிர்நோக்கி பொதுநிதியின் கீழ் அமர்த்தி கொள்ள இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.671, நாள்.31.01.2019–ன்படி நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து, 20.02.2019ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.என்.செல்வராஜ் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.712, நாள்.28.02.2019–ன்படி ஏற்றுக்கொண்டதையடுத்து மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டது இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் செயலானைகள் ந.க.எண்.8408/2019/இ2, நாள்.11.06.2019–ன்படி இப்பணி உட்பட புதியதாக ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்துதல், பழைய ஆழ்துளை குழாய் கிணறுகளை அலசி சுத்தம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.78.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மார்ச் 2019 முதல் ஜூலை 2019 வரை இப்பணிக்காக ரூ.8,09,200/– செலவிடப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சிக்கு சொந்தமான 4 குடிநீர் டேங்கர் லாரிகளில் வாகனங்களுக்கு முறையே வட்டார போக்குவரத்து துறை மூலம் தகுதிகான் சான்று பெறவேண்டியுள்ளதால் நகராட்சி வாகனங்களை முறையே பணிமனைக்கு அனுப்ப வேண்டிய நிலையுள்ளதால், பொதுமக்களுக்கு தடையின்றி டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ஏதுவாக மேற்படி ஒப்பந்ததாரர் மூலமே தொடர்ந்து இதே ஒப்பந்த விலை மற்றும் நிபந்தனைகளின்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) குடிநீர் பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி கூடுதல் செலவினத்தினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.882** **நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 27</u>

திருவேற்காடு நகராட்சி அலுவலகம் தற்போது ஐயப்பமடம் சாலையில் உள்ள ஸ்ரீலஸ்ரீ ஐயப்பசாமிகள் திருமடம் மற்றும் அறக்கட்டளைக்கு சொந்தமான கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகின்றது. அலுவலக வளாகத்தில் அவ்வப்போது நிர்வாகம் சம்மந்தப்பட்ட பல்வேறு ஆய்வு கூட்டங்கள் ஆணையர் தலைமையில் நடைபெற்று வரும் நிலையில் இந்நகராட்சியின் உட்புற மற்றும் வெளிபுற பணியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துக் கொள்ள தேவையான போதிய நாற்காலி வசதிகள் இல்லாத காரணத்தினால் சிரமம் ஏற்படுகின்றது. எனவே, மேற்படி கூட்டங்களில் கலந்துக்கொள்ளும் பணியாளர்களின் வசதிக்காக புதியதாக எளிய முறையில் கையாள ஏதுவாக 100 எண்கள் பிளாஸ்டிக் தயாரிப்பிலான நாற்காலிகளை கொள்முதல் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி மூலம் வசூலிக்கப்படும் சமூதாய பொறுப்புணர்வு நிதியின் (CSR) கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
இ) பணியின் அவசியத்தினை கருதி அரசு நிறுவனமான சிட்கோ மூலம் விலைப்புள்ளி பெற்று நேரடியாக கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.883 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 28</u>

இந்நகராட்சி சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் டாடா ஏ.சி. வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் (Insurance) 14.11.2019 உடன் முடிவடைவதால் ஒரு வருட காலத்திற்கு காப்பீடு தொகை **192339.00** கீழ்குறிப்பிட்டுள்ள வாகனங்குளுக்கு ஆயுள் காப்பீட்டு கட்டணம் The New India Assurance Company Limited நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>வாகனங்களின் விவரம்:–</u>**

| வ.எண் | வாகனம் எண் | தொகை |
|---|---|---|
| 1 | TN-12-U-1038 | ரூ.22173.00 |
| 2 | TN-12-U-1072 | ரூ.22173.00 |
| 3 | TN-12-T-6859 | ரூ.28373.00 |
| 4 | TN-12-AB-7437 | ரூ.24124.00 |
| 5 | TN-12-AB-7449 | ரூ.24124.00 |
| 6 | TN-12-AB-7411 | ரூ.24124.00 |
| 7 | TN-12-AB-7456 | ரூ.24124.00 |
| 8 | TN-12-AB-7439 | ரூ.24124.00 |
| **மொத்தம்** | | **1,93,339.00** |

**அலுவலக குறிப்பு:-**
அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.884 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண். 29</u>

இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி சிறப்பாக நடைப்பெற்று வருகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதால், நகராட்சி பகுதியில் டெங்கு, சிக்கன்குனியா, மலேரியா மற்றும் டைபாய்டு போன்ற காய்ச்சல்கலும் பருவகால மாறுபாடுகளினால் பரவும் அபாயம் உள்ளதாலும் மேலும் மாவட்ட ஆட்சி தலைவர், திருவள்ளூர் மாவட்டம், இணை இயக்குநர் பொது சுகாதாரம், திருவள்ளூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் டெங்கு ஒழிப்பு ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி நகராட்சி பகுதி முழுவதும் ஒட்டுமொத்த துப்புரவு பணி மற்றும் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக கடந்த 23.09.2019 தெரிவிக்கப்பட்டதில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு கூடுதலாக (RRT ) Rapid Response Team தீவிர காய்ச்சல் தடுப்பு குழு அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால், நகராட்சியில் தற்போது பணிபுரியும், பணியாளர்களுடன் கூடுதலாக 20 (DBC) பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆக மூன்று மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி விகிதப்படி ஊதியம் வழங்கவும் ஏற்கனவே DBC பணியாளர்கள் சப்ளை செய்ய உத்திரவு வழங்கப்பட்டுள்ள **விடிவெள்ளி ரூரல் டிவலப்மெண்ட் டிரஸ்ட்** என்ற நிறுவனத்திற்கு அதே ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்படைப்பு செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள்வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.885 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**பொருள் எண். 30**

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சி 18 வார்டுகளை கொண்டதாகும். இந்நகராட்சி மொத்த பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் ஆகும். மேலும் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 62289 ஆகும். தற்போது மக்கள் தொகை சுமாராக 89164 ஆகும். நகராட்சி பகுதியில் நாள் ஒன்றுக்கு 22.89 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் தொடர் மழைகாரணமாவும், வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதாலும், நகராட்சி பகுதியில் டெங்கு நோய், சிக்கன்குனியா, மலேரியா மற்றும் டைபாய்டு போன்ற தொற்று நோய்கள், பருவகால மாறுபாடுகளினால் பரவும் அபாயம் உள்ளதாலும் மேலும் மாவட்ட ஆட்சி தலைவர், திருவள்ளூர் மாவட்டம், இணை இயக்குநர் பொது சுகாதாரம், திருவள்ளூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் டெங்கு ஒழிப்பு ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படி நகராட்சி பகுதி முழுவதும் ஒட்டுமொத்த துப்புரவு பணி மற்றும் களப்பணி மேற்கொள்ளவும், தெரிவிக்கப்பட்டத்தில் நகராட்சியில் தற்போது பணிபுரியும், பணியாளர்களுடன் கூடுதலாக 50 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அக்டோபர் மற்றும் நவம்பர் ஆக இரண்டு மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே ஒப்பந்தப்பணி மேற்கொண்டு வரும் M/s.V.K. Contractor நிறுவனத்தாரர் மூலம் அதே விலைவிகிதத்தின் அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும், இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.18.90 இலட்சத்திற்கு பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள்வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.886 நாள்.30.09.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**ஒம்/-தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/

**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**